AKHBAR : TAMIL NESAN
MUKA SURAT : 1 & 14
RUANGAN : GENERAL NEWS

DAUN BETIK RAWAT DENGGI

'டிங்கி' காய்ச்சலுக்கு மாற்று மருந்தாக பப்பாளி இலை!

சுங்கைப்பட்டாணி, அக். 7- பப்பாளி இலையை உட்கொள்வதன் வழி உடம்பில் உள்ள இரத்தத்தில் உள்ள சிவப்பணுக்கள் அதிகரிப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதால் டிங்கி நோயை குணமாக்க பப்பாளி இலை சிறந்த மாற்று மருந்து என ஏய்ம்ஸ்ட் கல்லூரியின் ஆராய்ச்சியாளர் டாக்டர் கதிரேசன் தெரிவித்துள்ளார். பல ஆராய்ச்சியாளர்கள் இதற்கு முன்பு பப்பாளி இலையைக் கொண்டு சர்க்கரை நோய்க்கும் மற்ற இதர நோய்களுக்கும் மருந்து தயாரிக்க முயற்சி செய்துள்ளனர். ஆனால் பப்பாளி இலை டிங்கி காய்ச்சலுக்கு

14ஆம் பக்கம் பார்க்க...

'டிங்கி' காய்ச்சலுக்கு மாற்று மருந்தாக...

மட்டுமே சரியான மருந்து என டாக்டர் கதிரேசன் கூறினார்.

கடந்த 2009ஆம் ஆண்டு 'தி மிடல் ஐரோப்பியன் ஜெர்னல் ஆஃப் சைன்ஸ்' எனும் ஆராய்ச்சி காணொளியில் பப்பாளி இலையை ஆராய்ச்சி செய்துள்ளனர். இந்த டிங்கி காய்ச்சலுக்கான மருந்தை கண்டுபிடிப்பதற்கு அந்த ஆராய்ச்சியே அடிப்படையாகக் கொண்டு தாங்கள் செயல்பட்டதாக டாக்டர் கதிரேசன் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

டாக்டர் கதிரேசன் தரப்பு ஆராய்ச்சியாளர்கள் கடந்த 2008ஆம் ஆண்டு முதல் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்துள்ளனர். ஆராய்ச்சியின் தொடக்கத்தில் ஓர் எலியைக் கொண்டு ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளனர். பப்பாளி இலையை உட்கொண்ட எலியின் சிவப்பணுக்களின் எண்ணிக்கை நான்கு மணி நேரத்தில் மூன்று மடங்கு அதிகரித்துள்ளன.

சில ஆண்டுகளுக்கு முன்பு பப்பாளி இலையின் நன்மையை நன்கு அறிந்து அது குறித்து பொது மக்களிடம் தெரிவித்த போது சரியான ஆராய்ச்சிக் கழகத்தின் அறிக்கை இல்லாத காரணத்தால் இந்தக் கூற்றை ஏற்றுக் கொள்ள பல தரப்பிலிருந்து எதிர்ப்பு வந்தது. இதற்கு முன்பு நடத்தப்பட்ட சோதனைகளிலும், ஆராய்ச்சிகளிலும் எலிகளை மட்டுமே உபயோகித்ததால் எந்தவித பாதிப்பும் இல்லை. இதற்கு பிறகு மனிதரை வைத்து நடத்தப்படவுள்ள ஆராய்ச்சிகளுக்கு சில விதிமுறைகளும், கட்டுப்பாடுகளும் உண்டு என டாக்டர் கதிரேசன் தெரிவித்தார்.

இந்த பப்பாளி இலை டிங்கி காய்ச்சலுக்கு உகந்த மருந்து எனவும், சுலபமாகக் கிடைக்கக்கூடிய மருந்து எனவும், கடினமான சிகிச்சை முறைகளை தவிர்க்கக்கூடிய வழிமுறை எனவும் டாக்டர் கதிரேசன் தெரிவித்தார். டிங்கி காய்ச்சலுக்கு ஆளான 20க்கும் மேற்பட்ட நோயாளிகள் தம்மை தொடர்பு கொண்டு ஆலோசனை கேட்டதாக டாக்டர் கதிரேசன் தெரிவித்தார்.

அவர்களுக்கு நாளுக்கு இருமுறை மூன்று அல்லது நான்கு பப்பாளி இலைகளை உட்கொள்ளும்படி கேட்டுக் கொண்டுள்ளார். இதை முறையாக செய்த மூன்று, நான்கு நாட்களில் மீண்டும் டாக்டர் கதிரேசனைத் தொடர்பு கொண்டு டிங்கி காய்ச்சல் முழுமையாக குணமடைந்ததாகவும் தெரிவித்துள்ளனர். இந்த வழிமுறை டிங்கி காய்ச்சல் தாக்கப்பட்டவர்கள் ஆரம்பக் கட்டத்திலேயே செய்ய வேண்டிய வழிமுறை என்றும் டாக்டர் கதிரேசன் தெரிவித்தார்.

ஆரம்பக் கட்ட டிங்கி காய்ச்சலில் தாக்கப்பட்டவர்கள் புது பப்பாளி இலையில் உள்ள ரப்பர் பசையை நன்கு கழுவிய பின் உட்கொள்ள வேண்டும் என டாக்டர் கதிரேசன் கேட்டுக் கொண்டார். பப்பாளி இலையில் நடத்தப்படும் ஆராய்ச்சிக்குப் பிறகு, பப்பாளி காம்பு, பழத்தின் தோல், வேர் உட்பட அனைத்தையும் ஆராய்ச்சி செய்யவுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

Pakar penyelidik dari Universiti Aimst Dr.Kathiresan mengesahkan bahawa daun betik boleh digunakan untuk merawat penyakit denggi disebabkan ia boleh tingkatkan sel platelet dalam darah. Penemuan ini boleh memainkan peranan penting dalam pengurusan demam denggi di Negara kita, dinyatakan oleh beliau.

AKHBAR : NANBAN
MUKA SURAT : 1 & 13
RUANGAN : GENERAL NEWS

DAUN BETIK RAWAT DENGGI – PAKAR PENYELIDIK AIMST

டிங்கிக் காய்ச்சலை குணப்படுத்த

பப்பாளி இலையைப் பயன்படுத்தலாம்

ஏய்ம்ஸ்ட் ஆராய்ச்சியாளர் தகவல்

சுங்கைப்பட்டாணி, அக்.7 -

இரத்த சிவப்பு அணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையிலான ஒரு மாற்றுச் சிகிச்சையாக பப்பாளி இலைகளின் பயன்பாடு ஆக்ககர அறிகுறிகளை வெளிப்படுத்தியுள்ள நிலையில் பப்பாளி இலைகளை டிங்கிக் காய்ச்சலை குணப்படுத்த பயன்படுத்தலாம் என ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கு முன் பப்பாளி இலைகளின் திறனை தீர்மானிக்கும் ஆராய்ச்சியை பல

பக்கம் 13

டிங்கிக் காய்ச்சலை குணப்படுத்த பப்பாளி இலையைப் பயன்படுத்தலாம்...

மருத்துவ நிறுவனங்கள் மேற்கொண்டன. அவ்வாராய்ச்சிகள் யாவும் பப்பாளி இலையில் நீரிழிவு உள்ளிட்ட பல்வேறு நோய்களை குணப்படுத்தும் திறனை தீர்மானிப்பதற்கானதாகும். எனினும் அந்த இலைகள் டிங்கிக் காய்ச்சலை குணப்படுத்துவதற்கு மிகவும் பொருத்தமானவை எனக் கண்டறியப்பட்டது.

சுண்டெலிகளின் இரத்த சிவப்பு அணுக்களை அதிகப்படுத்துவதற்கு பப்பாளி இலை எந்தளவுக்கு செயல் புரிகிறது என்பதைத் தீர்மானிக்கும் வகையில் அந்த ஆய்வு 2008இல் தொடக்கப்பட்டது.

மருத்துவ ரீதியிலான சோதனைக்கு முந்திய அந்த ஆய்வில் ஒவ்வொரு சுண்டெலியின் இரத்தச் சிவப்பணுக்களும் நான்கு மணி நேரத்திற்குள் மூன்று மடங்கு அதிகரித்தன. பப்பாளி இலைகளில் இரத்தச் சிவப்பணுக்களை அதிகரிக்க உதவும் என்சைம் எனப்படும் செரிமானப் பொருட்கள் ஏராளமாக உள்ளன.

மேற்கண்ட ஆராய்ச்சி விவரம் 2009இல் மத்திய ஐரோப்பிய மருத்துவ சஞ்சிகையில் வெளியிடப்பட்டது. அது பப்பாளி இலை மீதான ஆய்வுக்கு அடிப்படையாக அமைந்தது என ஏய்ம்ஸ்ட் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் டாக்டர் கதிரேசன் இங்கு பெர்னாமாவிடம் கூறியுள்ளார்.

இவ்வாறான ஆராய்ச்சி முடிவுகள் ஊடகங்களில் வெளியாகின. எனினும் பப்பாளி இலைகள் டிங்கிக் காய்ச்சலை குணப்படுத்தும் திறனுடையது என மருத்துவ ரீதியில் நிரூபிக்கப்படாத நிலையில் அந்த இலையைப் பயன்படுத்த பலர் துணியவில்லை.

நமது முந்தைய ஆராய்ச்சி பொதுமக்களை சம்பந்தப்படுத்தவில்லை. ஆனால், இப்போது அத்திறன் விவரம் மருத்துவ ரீதியில் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனினும் மனிதர்களிடம் மருத்துவ ரீதியில் சோதிக்கும் போது பின்பற்ற வேண்டிய சில விதிமுறைகள் உள்ளன என்றும் டாக்டர் கதிரேசன் கூறினார்.

டிங்கிக் காய்ச்சலை குணப்படுத்தும் வகையில் பப்பாளி இலைகளை பயன்படுத்துவது எளிதானதாகும். அந்த இலைகள் மலேசியாவில் தாராளமாகக் கிடைக்கின்றன. அதைப் பயன்படுத்தும் வழி முறையில் சிக்கல் ஏதும் இல்லை என்றார் டாக்டர் கதிரேசன்.

Pakar penyelidik dari Universiti Aimst yang diketuai oleh Dr.Kathiresan mengesahkan bahawa daun betik boleh digunakan untuk merawat penyakit denggi disebabkan ia boleh tingkatkan sel platelet dalam darah. Penemuan ini boleh memainkan peranan penting dalam pengurusan demam denggi di Negara kita, dinyatakan oleh Dr.Kathiresan.

AKHBAR : TAMIL NESAN
MUKA SURAT : 15
RUANGAN : GENERAL NEWS

SEBANYAK 1,051 KES DEMAM DENGGI DIREKODKAN DI NEGERI TERENGGANU DALAM TAHUN INI.

திரெங்கானுவில் முதல் ஒன்பது மாதங்களில் 1,051 டிங்கி சம்பவங்கள் பதிவு!

TN15

கோலத்திரெங்கானு, அக். 7--

கடந்தாண்டைக் காட்டிலும் இவ்வாண்டு முதல் ஒன்பது மாதங்களில் திரெங்கானுவில் பதிவான டிங்கி சம்பவங்கள் உயர்வு கண்டிருப்பதாக அம்மாநில சுகாதார இயக்குநர் டத்தோ டாக்டர் அன்வா சுலைமான் தெரிவித்தார்.

கடந்தாண்டு அம்மாநிலத்தில் முதல் ஒன்பது மாதங்களில் 357 டிங்கி சம்பவங்கள் பதிவான வேளையில் இவ்வாண்டு மொத்தம் 1,051 டிங்கி சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அதாவது 194 விழுக்காடு உயர்வு கண்டிருப்பதாக அவர் மேலும் சொன்னார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், கோலத்திரெங்கானுவில் அதிகமான சம்பவங்கள் (680) பதிவாகியுள்ளன. அதற்கு அடுத்த படியாக பெசூட் (88), மாராங் (80), டூங்கூன் (77), கெமாமான் (75), உலுதிரெங்கானு (37), செத்தியூ (14) என பதிவாகியுள்ளது. கோலத்திரெங்கானுவில் மீண்டும் டிங்கி நோய் ஏற்பட்டுள்ள மூன்று இடங்கள் கண்டறியப்பட்டுள்ளது.

டிங்கி நோய்கள் ஏற்பட்டுள்ள இடங்கள் தூய்மையான நிலையில் இருக்கும் பொருட்டு சுகாதாரத்துறை இதர அரசாங்க துறைகள் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்து கூட்டுறவு பணியை மேற்கொண்டுள்ளது. அதோடு, தனது சுகாதாரத் துறை 175,369 குடியிருப்பு மற்றும் வர்த்தக இடங்களில் மேற்கொண்ட சோதணையில் 1,181 இடங்கள் ஏடிஸ் கொசுக்கள் இனவிருத்தி செய்யும் இடங்களாக இருப்பது தெரிய வந்துள்ளது.

சம்மந்தப்பட்ட இடங்களில் அதன் உரிமையாளர்கள் சுகாதாரத்தைப் பேணும் வகையில் 8,680 நோட்டிஸ் வெளியாக்கப்பட்டிருப்பதாகவும் ரிம 253,000 மதிப்பிலான 506 அபராதங்கள் விதிக்கப்பட்டுள்ளது. இதுவரையில், ரிம 34,260 மதிப்பிலான 279 அபராதங்களை சம்மந்தப்பட்டவர்கள் செலுத்தியுள்ளனர். இதே தவற்றை அவர்கள் மீண்டும் செய்யாமல் இருக்கும் பொருட்டு அவர்கள் இந்த அபராதங்களை செலுத்துவதை நாங்கள்

Dari bulan Januari hingga September 2014 sebanyak 1,051 kes demam denggi direkodkan di negeri Terenggani. Manakala hanya 357 kes sahaja direkodkan dalam negeri ini pada tahun lepas dengan tempoh masa yang sama. Ini merupakan mengalami peningkatan kes demam denggi pada tahun ini sebanyak 194%, dinyatakan oleh Pengarah Kesihatan negeri tersebut.